**ஜூன் – 11**

**"சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை."**

**- பிலி 3 : 13**

எந்த மனிதனும் ஒரு திருப்திகரமான ஆவிக்குரிய நிலையை அடைந்திருக்கிறேன் என்று எண்ணினால், அந்த நிமிஷத்திலிருந்தே தன்னுடைய ஆவிக்குரிய நிலையின் சிதைவு ஆரம்பித்துவிட்டது என்று தேதி குறிக்கலாம். அந்தப் பூரண மாதிரியான கிறிஸ்துவைப் போலாவதற்கு சிரத்தையுடன் முயற்சி செய்கிற ஒரு உண்மையுள்ள கிறிஸ்துவின் சீஷனுக்கு இக்காலத்தில் அவன் அடைந்திருக்கிற எதுவும் திருப்பதிகரமாயிருக்காது. கிறிஸ்துவிலிருந்து நமது கண்களைத் திருப்பிக் கொள்ளும் போது மாத்திரமே, சுயதிருப்தி ஏற்படலாம். ஏனென்றால், அந்த மாதிரியை எப்பொழுதும் நம் கண்முன் வைத்திருந்தோமானால், அவைகள் மற்றவர்களுக்கு அதிகமாகத் தெரிகிறது. கிறிஸ்துவைப் போலாகுவதில் ஒரு தொடர்ச்சியான வளர்ச்சியை அடைவதில் மட்டுமே கிறிஸ்தவன் திருப்தியைக் காணமுடியும். **- Z ’95, 250 (R 1884).**

மிகவும் கடினமான சோதனைக்கடியில் பரி-பவுல் கிறிஸ்துவைப் போலொத்த ஒரு குணத்தை அடைந்து, அதைப் பரிபாலிக்க வேண்டுமென்பதற்காகவே கர்த்தர் அவனைப் பிடித்தார். பரி.பவுல் இந்த வார்த்தைகளை எழுதும்பொழுது, அப்படிப்பட்ட ஒரு குணத்தை அவன் இன்னமும் பூரணப்படுத்தவில்லை. பரி.பவுலுடைய குணத்தின் மிகக் குறைந்த பாகத்தை மாத்திரமே கொண்டுள்ள அநேகர் சுயதிருப்தி உடையவர்களாய் இருந்திருப்பார்கள். அப்போஸ்தலன் அப்படியிருக்கவில்லை. அவன் எடுத்துக்கொண்ட அமைதியான சுயமதிப்பு தன்னுடைய குறைகளைத் தாழ்மையுடன் கண்டுகொள்ளவும், தன்னுடைய சிறந்த இலட்சியத்தை அடையவும், பரிபாலிக்கவும் கஷ்டப்பட்டு முயற்சி செய்ய சாத்தியமாக்கிறது. **-P ’36, 78.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோபு 25:5; சங் 131:1; நீதி 15:33; ஏசா 57:15; எரே 45:5; மீகா 6:8; மத் 5:3;23:12 லூக் 10:21; 17:10; ரோம 12:3,10,16; 1கொரி 13:4; 9:24-27; 15:58; பிலி 1:21; ரோம 7:1; 2கொரி 7:1; எபி 5:14.

**கோபுரவாசிப்பு : Z ’12, 255 (R 5080)**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தில் நான் அடைந்த அனுபவங்கள் எவை? அவற்றை எவ்வாறு சந்தித்தேன்? அவற்றிலிருந்து நான் அடைந்த லாபம் என்ன?